
## திராவிடத்தால் வாழ்கிறோம்

901

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

# 'மைனாரிட்டி' தி.மு.க.

மரு.எஸ்.ஏ.எஸ்.ஹபிசுல்லா

20



தி.மு.க.வுக்கும் சிறுபான்மையினருக்குமான உணர்வுப்பூர்வமான உறவையும் உரிமைச் செயல்பாடுகளையும் விவரிக்கும் தொடர்

# இந்திய இஸ்லாமியர்களின் இதயம் வென்ற தலைவர்!

வக்ஃபு வாரிய திருத்தச் சட்டம் தொடர்பாக அமைக்கப்பட்டிருந்த நாடாளுமன்றக் கூட்டுக்குழு 655 பக்க அறிக்கையைத் தயார் செய்திருந்தது. அதில் தேசிய ஜனநாயகக் கூட்டணியின் சார்பில், அங்கம் வகித்த உறுப்பினர்களின் 14 திருத்தங்கள் ஏற்கப்பட்டன. மக்களவையிலும், மாநிலங்களவையிலும் மசோதா தாக்கல் செய்யப்படலாம் என்ற சூழலில், 2025, மார்ச் 27-ஆம் தேதி தமிழ்நாடு சட்டமன்றத்தில் வக்ஃபு வாரிய திருத்த மசோதாவிற்கு எதிராக சிறப்புத் தீர்மானத்தை நிறைவேற்றினார் முதலமைச்சர் அவர்கள்.

“சிறுபான்மை மக்களுக்கு எதிரான மத சுதந்திரத்தை நிராகரிக்கும், அரசியலமைப்புக்கு எதிரான, நீதிமன்றத் தீர்ப்புகளுக்கு முரணான தேவையற்ற பிரிவுகள் வக்ஃபு திருத்தச் சட்டத்தில் இருக்கின்றன. இந்தத் திருத்தச் சட்டம் வக்ஃபு அமைப்பையே காலப்போக்கில் செயல்பட விடாமல் முடக்கிவிடும். வக்ஃபு சொத்துகளை, அரசு கைப்பற்றுவதற்கான வாய்ப்பை உருவாக்குவதாக இஸ்லாமியர்கள் அச்சப்படுகிறார்கள். இது இஸ்லாமியர்களின் உணர்வுகளைப் புண்படுத்துவதாக இருக்கிறது. எனவே வக்ஃபு வாரிய திருத்தச் சட்ட முன்வடிவினை முழுமையாக திரும்பப்பெற வேண்டும்” என்று வலியுறுத்தியது அத்தீர்மானம்.

எதிர்க்கட்சிகளின் எதிர்ப்பு, நாடெங்கும் மக்கள் மன்றத்தில் இருந்து வந்த எதிர்ப்பு, இஸ்லாமிய மக்களிடம் இருந்து பேரச்சத்துடன் எழுந்த எதிர்ப்பு என அத்தனை எதிர்ப்புகளையும் புறந்தள்ளிவிட்டு, ஜனநாயகத்தின் குரல்வளையை நெரிக்கும் விதமாக, மக்களவையில் ஏப்ரல் 2-ஆம் தேதி மசோதாவைத் தாக்கல் செய்தார் ஒன்றிய அமைச்சர் கிரண் ரிஜிஜு.

**வரலாற்றுப் பேராவண உரை!**

மக்களவையில் நள்ளிரவு 2 மணி வரை காரசாரமான விவாதம் நடைபெற்றது. இந்த விவாதத்தில் சுமார் ஒரு மணி நேரம் பேசினார் கழகத் துணை பொதுச்செயலாளர், நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.ராசா. அவரது ஒவ்வொரு வார்த்தையும், எடுத்துவைத்த வாதங்களும் இந்திய நாடாளுமன்ற வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய சிறப்புக்குரியவை. இஸ்லாமியர் அல்லாத ஒருவர், இவ்வளவு ஆணித்தரமாக இத்தகைய வாதங்களை இஸ்லாமியர்களுக்காக முன்வைக்க முடியுமென்றால், அது தி.மு.கழக உடன்பிறப்பால்தான் முடியும் என்று சவால் விட்டுச் சொல்லத்தக்க வரலாற்றுப் பேராவணம் அந்த உரை.

“இந்த வக்ஃபு சட்டம் 1954-இல் முதன்முதலில் இயற்றப்பட்டது. அதன் பிறகு, 1959, 1964 மற்றும் 1969-இல் திருத்தப்பட்டது. பிறகு 1984-இல் விரிவான திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. அதற்கெல்லாம் அடிப்படைக் காரணிகள் இருந்தன. 1995 மற்றும் 2013-ஆம் ஆண்டுகளில் உரிய விவாதத்திற்குப் பிறகு, கொண்டு வரப்பட்ட நல்ல திருத்தங்களை நீக்குவதற்காக 'தந்திரமாகவும்' 'அதிபுத்திசாலித்தனமாகவும்' திருட்டுத்தனமாகவும் இந்த மசோதா கொண்டுவரப்பட்டுள்ளது. குறைந்தது ஐந்து வருடங்களாக இஸ்லாத்தைக் கடைப்பிடிக்கும் ஒருவர்தான் வக்ஃபு அமைப்பை ஏற்படுத்த, நிர்வகிக்க தகுதியானவர் என்று நீங்கள் திருத்தியுள்ளீர்கள். அதுமட்டுமல்ல, யாரும் 'குறுக்கு வழித் தந்திரத்தில்' (Contrivance) ஈடுபட்டிருக்கக்கூடாது என்றும் குறிப்பிட்டுள்ளீர்கள். உங்களுக்கு இந்த 'சொல்லாடல்கள்' எல்லாம் எங்கிருந்து வந்தன? உங்கள் முழு முயற்சியும், ஒரு கொடூரமான திட்டமிடப்பட்ட சூழ்ச்சி (Diabolical contrivance), அருவருப்பானது என்பதைத் தவிர வேறில்லை” என்று அவர் ஆற்றிய உரையில் ஆளுங்கட்சியான பா.ஜ.க. ஆடிப்போனது.

“பா.ஜ.க. சார்பில் ஒரு இஸ்லாமியப் பிரதிநிதி கூட மக்களவையில் இல்லை. நீங்கள் மதச் சுதந்திரத்தை எப்படிப் பாதுகாப்பீர்கள்? ஆர்.எஸ்.எஸ்.ஸை நோக்கிச் செல்ல வேண்டாம் என்று பா.ஜ.க.-வை எச்சரிக்கிறேன்” என்று ஆ.ராசா எடுத்துவைத்த தர்க்க ரீதியான வாதங்களால் இந்தியா கூட்டணிக் கட்சிகள் சிலிர்த்துப்போய், தங்கள் நேரத்தை அவருக்குக் கூடுதலாகப் பேச வாய்ப்பை ஏற்படுத்தித் தந்தார்கள். மக்களவையில் 15 மணி நேர விவாதம், மாநிலங்களவையில் 17 மணி நேர விவாதம் என அத்தனை எதிர்ப்புகளையும் மீறி, அரசியல் சாசனத்தின் மதச்சார்பின்மைக் கோட்பாடுகளை கேலிக்கூத்தாக்கி, ஆதாயத்துக்காக அணி சேர்ந்த கூட்டணிக் கட்சிகளின் தயவுடன் மசோதாவை நிறைவேற்றியது பா.ஜ.க. அரசு.

> இந்த யுத்தத்தில் தமிழ்நாட்டு முஸ்லிம்கள் மட்டுமல்ல, ஒட்டுமொத்த இந்திய முஸ்லிம்களின் இதயத்தையும் வென்றார், முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்.

**நீதிமன்றக் கதவுகளைத் தட்டிய தி.மு.க.!**

ஆனால், எல்லாம் முடிந்துவிட்டது என சோர்ந்துவிடப் போய்விடவில்லை கழகத் தலைவர். 'நீதிமன்றத்தின் கதவுகளைத் தட்டுவோம்' என அன்றே அறிவித்தார். அதுமட்டுமல்ல, தொடக்கம் முதல் இவ்விவகாரத்தில் முழுமூச்சாக தன்னை ஈடுபடுத்திக்கொண்டு, இஸ்லாமியர்களின் குரலாகவே ஒலித்த ஆ.ராசாவின் பெயரிலேயே இந்த வழக்கு தொடரப்படும் என்றும் அறிவித்தார். “தமிழ்நாட்டில் உள்ள சுமார் 50 லட்சம் முஸ்லிம்கள் மற்றும் நாட்டின் பிற பகுதிகளில் உள்ள 20 கோடி முஸ்லிம்களின் உரிமைகளையும் மீறுகிறது, இந்த வக்ஃபு வாரிய திருத்தச் சட்டம். எனவே, இந்த சட்டத்திருத்தத்தை ரத்து செய்ய வேண்டும்” என மனுத்தாக்கல் செய்தார் ஆ.ராசா.

கழகத்தோடு சேர்த்து மொத்தம் 7 மனுதாரர்கள் முறையிட்டிருந்தனர். ஆ.ராசா சார்பாக ஆஜரான மூத்த வழக்கறிஞரும் கழகத்தின் மாநிலங்களவை உறுப்பினருமான வில்சன் “பொது ஒழுங்கு, பொது சுகாதாரம் போன்றவை பாதிக்கப்படும் போது மட்டுமே இயற்றப்படும் கட்டுப்பாடுகளைக் கொண்ட சட்டங்களை வக்ஃபு சட்டத்திருத்தம் கொண்டுள்ளது. ஆகவே இச்சட்டத்திருத்தத்திற்கு இடைக்கால தடை விதிக்க வேண்டும்'' என வாதங்களை முன்வைத்தார்.

**தி.மு.க. போர்க்குணத்திற்கு நிகரில்லை!**

தி.மு.க தரப்பில் எடுத்து வைக்கப்பட்ட வாதங்களுக்கு, நியாயமான பதில் வாதத்தை எடுத்து வைக்க முடியாமல் திணறியது ஒன்றிய அரசு. வக்ஃபு வாரிய திருத்தச் சட்டத்திற்கு இடைக்கால தடை விதித்தது உச்சநீதிமன்றம்.

திராவிட முன்னேற்றக் கழகம் இவ்விவகாரத்தில் விடாப்பிடியாக நின்று, இஸ்லாமியர்களின் வக்ஃபு சொத்துகளைப் பாதுகாக்கக் காட்டிய உறுதியைப் போல, துணையைப்போல, ஆதரவைப்போல, போர்க்குணத்தைப் போல மற்றொரு கட்சியாலோ, அமைப்பாலோ, இயக்கத்தாலோ காட்டிவிட முடியாது. திராவிட- இஸ்லாமிய நட்பார்ந்த மரபின் உள்ளத்தில் ஊறி ஒன்றியிருக்கும் அந்த உணர்வுக்கு நிகரில்லை என்பதற்கு இன்னும் ஆயிரமாயிரம் ஆண்டுகளுக்குச் சான்றாக இருக்கும் வக்ஃபு உரிமைகளை நிலைநாட்ட நடந்த இந்த கள மற்றும் சட்ட யுத்தம். இந்த யுத்தத்தில் தமிழ்நாட்டு முஸ்லிம்கள் மட்டுமல்ல, ஒட்டுமொத்த இந்திய முஸ்லிம்களின் இதயத்தையும் வென்றார், முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்.

...நீளும்

மக்களவையில் வக்ஃபு வாரிய சட்டத் திருத்த மசோதா நிறைவேற்றப்பட்டதைக் கண்டித்து தி.மு.க. மற்றும் கூட்டணிக் கட்சி எம்.பிக்கள் கருப்பு உடை அணிந்து எதிர்ப்பைப் பதிவு செய்த காட்சி.



## இது கலைஞருக்கு கிடைத்த வெற்றி!

தந்தை பெரியாரும், பேரறிஞர் அண்ணாவும், முத்தமிழறிஞர் கலைஞரும் சிலைகளாக கூட எவ்வளவு அச்சுறுத்தல் தருகிறார்கள் என்பதை, சித்தாந்த எதிரிகள் வெளிக்காட்டிக்கொண்டே இருக்கிறார்கள். நீதிமன்றக் கூண்டிற்கு செல்லும்போது மனநலம் பாதித்தவர் என்று, பிணை பெறுவதும் அவர்களின் வாடிக்கையாகி விட்டது.

இதுதொடர்பாக, சமூக வலைதளப் பக்கத்தில் பதிவிட்டுள்ள சிவக்குமார் என்பவர், “காமராஜரைக் கடுமையாக எதிர்த்த தி.மு.க.-தான், அவர் இருக்கும்போதே முழு உருவச்சிலையை வைத்து மகிழ்ந்தது. எம்.ஜி.ஆரைக் கடுமையாக எதிர்த்த தி.மு.க.தான், தமிழ்நாடு மருத்துவப் பல்கலைக்கழகத்துக்கு அவர் பெயரில் கட்டடம் கட்டியது. ஜெயலலிதாவைக் கடுமையாக எதிர்த்த தி.மு.க.தான், அவர் பெயரில் புதிய பல்கலைக்கழகம் அமைக்கும் மசோதாவிற்கு சட்டப் போராட்டம் நடத்தி அனுமதி வாங்கியது.

தன் மீது செருப்பு வீசப்பட்டபோது, 'ஒரு செருப்பை வைத்துக்கொண்டு நான் என்ன செய்வது? இன்னொரு செருப்பையும் சேர்த்தே வீசுங்கள்' என்று சொன்னவர் தந்தை பெரியார். தேர்தலின்போது தன்னைக் குறித்து ஆபாசமாக எழுதப்பட்ட வசவு வார்த்தைகளை அழிக்க முற்பட்ட தன் தம்பிகளைத் தடுத்து, 'என்னைப்பற்றி மக்கள் முடிவு செய்யட்டும், அதை அவர்கள் இரவிலும் படிக்க வசதியாக விளக்கிற்கு ஏற்பாடு செய்யுங்கள்' என்று சொன்னவர் அறிஞர் அண்ணா. பெரியாரின் விருப்பத்தை நிறைவேற்ற, அன்னை மணியம்மையார் அண்ணா சாலையில் தனக்காக வைத்த சிலை, எம்.ஜி.ஆர். மறைவின் காரணமாக உடைக்கப்பட்டபோது, 'சிலை உடைக்கும் தம்பி, என் முதுகில் குத்தாமல் நெஞ்சில்தான் குத்துகிறான்' என்று கவிதை எழுதி மகிழ்ந்தவர் தலைவர் கலைஞர்.

ஒருவரின் சிலைகளை உடைப்பதோ சேதப்படுத்துவதோ அவரின் பெயருக்கும் புகழுக்கும் எவ்வித குறைபாட்டையும் விளைவிக்காது. மக்கள் மனங்களிலிருந்து அவர்கள் புகழை என்றும் அகற்றவும் முடியாது.

தன் வாழ்நாளில், தான் கொண்ட கொள்கைகளை சட்டமாகவும் திட்டமாகவும் நிறைவேற்றி, வெற்றிகள் பல கண்டவர் தலைவர் கலைஞர். அந்தக் கொள்கைகளின் வெப்பம் தாங்காமல் தூக்கம் தொலைத்த சிறுமதியாளர்களே, இதுவும் கலைஞருக்கு கிடைத்த வெற்றி” எனப் பதிவிட்டுள்ளார்.

## ஃப்ளாஷ்பேக்



### தலைவரைச் சந்தித்து மரியாதை செய்தோம்!



நா.பாலசுப்பிரமணி

1988-ஆம் ஆண்டு இளைஞர் அணியின் அன்றைய செயலாளர்- இன்றைய தமிழ்நாடு முதலமைச்சர் தலைவர் தளபதி அவர்கள் தேர்தல் பிரச்சாரம் மேற்கொள்ள, கோயம்புத்தூர் ஆர்.எஸ்.புரத்திற்கு வருகை தந்திருந்தார். அப்போது இளைஞர் அணியிலிருந்த நாங்கள் குழுவாகச் சென்று, அன்னபூர்ணா விடுதியில் தங்கியிருந்த தலைவரைச் சந்தித்து, மாலை அணிவித்து சிறப்பு செய்தோம். உடன் இளைஞர் அணி தோழர்கள் தா.ராஜேந்திரகுமார், கோவை சுரேஷ் ஆகியோர் உள்ளனர்.

– நா.பாலசுப்பிரமணி, சிங்காநல்லூர், கோவை மாநகர் மாவட்டம்.

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### 16 திருத்தங்கள்!

1958-ஆம் ஆண்டு நாடாளுமன்றத்தின் இரு சபைகளும் இணைந்த கூட்டுக்கூட்டத்தில் குடியரசுத் தலைவர் உரைக்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில், கழகத்தின் சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஈ.வெ.கி.சம்பத்தும் திருவண்ணாமலை இரா.தர்மலிங்கமும் 16 திருத்தங்களை முன்வைத்தனர். கழக உறுப்பினர்கள் முன்வைத்த 16 திருத்தங்களில் மொழிப் பிரச்சனை பற்றிய திருத்தம் முக்கியமானதாகும்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131